விலை: 30.00
பக்கங்கள் - பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005

இல.44,
பிரவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 11 வியாழக்கிழமை (28.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

'ஒரே நாடு - ஒரே சட்டம்'

# ஞானசாரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி



## தமிழர்கள் எவரும் இல்லை விசேட வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

ஞானசார தேரர் தலைமையில் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' சட்டவரைபைத் தயாரிக்க 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதோடு தமிழர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)

# பெயருக்குக்கூட தமிழர்கள் இல்லை

## மனோ எம்.பி விசனம்

(கொழும்பு)

'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படாமை குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்

15

# சிங்கள பௌத்த நாடாக்க முயற்சி

## ஜனாதிபதி செயலணி தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் விசனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையை சிங்கள - பௌத்த நாடாக்க ஜனாதிபதி கோட்டா முயற்சிக்கின்றார் என

15

தமிழர்களின் பிரச்சினை தொடர்பில்

# பிரெஞ்ச் தூதுவருடன் கூட்டமைப்பு பேச்சு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கான பிரெஞ்ச் தூதுவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும்

15

2022ஆம் ஆண்டு முதல்

# நாடு முழுவதும் மணல் விநியோகிக்க புதிய முறை

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் கட்டுமானப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கீழ் நாடுமுழுவதும் மணல் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

15

வட மாகாணத்தில்

# எதிர்வரும் 3 நாட்களுக்கு மழை அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் எதிர்வரும்

15

மத அடையாளங்களுக்கு

# யாழ்.ஆரியகுளத்தில் எவ்வித அனுமதியும் இல்லை

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தீர்மானம்

3ஆம் பக்கம் பார்க்க

# அரசின் பங்காளி கட்சியினர் தாராளமாக வெளியேறலாம்

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருக்க வேண்டுமாயின் அரசாங்கத்தை விமர்சிக்காமல் பாதுகாக்கும் செயற்பாடுகளை பங்காளிக் கட்சியினர் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு முடியாவிடின் பங்காளி கட்சியினர் அரசாங்கத்திலிருந்து

15

Fun BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
• நிபந்தனைகளுக்கு உட்பட்டது SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.
(C-1505)
Dialog
எதிர்காலம் இன்றே.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜனாதிபதியின் தீர்மானம் மகிழ்ச்சியளிக்கிறது

# சட்டத்தின் முன் அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் - ஞானசார தேரர்

(கொழும்பு)

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும், முரண்பாடற்ற வகையிலும் ஒரே நாடு-ஒரே சட்டம் உருவாக்கத்திற்கான சட்ட வரைபு தயாரிக்கப்படும்.

சமூகத்தின் மத்தியில் காலம் காலமாக புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்த தீர்மானம் மகிழ்வுக்குரியது. என "ஒரே நாடு-ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

விசேட ஜனாதிபதி செயலணி நியமனம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சட்டத்தின் முன் அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும். நபர்களுக்கு மத்தியில் இனம், மதம், மொழி ஆகிய வரையறுக்கப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபாடுகள் காணப்படும்போது அவ்விடயத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

கடந்த காலங்களில் அவ்வாறான தன்மைகள் சமூகத்தின் மத்தியில் காணப்பட்டதை பல்வேறு காரணிகள் ஊடாக அறிந்துகொள்ளலாம்,

இலங்கையினுள் ஒரே நாடு-ஒரே சட்டம் என்ற கொள்கையை உறுதிப்படுத்துவதற்கு இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் பல்வேறு காரணிகளினால் தோல்வியடைந்தன.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவதில் அரசியல் காரணிகளும், அரசியல் நோக்கங்களும் ஒரு போதும் செல்வாக்கு செலுத்த கூடாது.

ஒரே-நாடு, ஒரே சட்டத்தை நிலைநாட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரத்தியேக ஜனாதிபதி செயலணியை நியமித்துள்ளமை மகிழ்வுக்குரியது.

அனைத்து இன மக்களின் மதம், கலாசாரம் மற்றும் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது அவசியமாகும்.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் முரண்பாடற்ற விதத்தில் ஒரே நாடு - ஒரே சட்டம் உருவாக்கத்திற்கான சட்ட வரைபு தயாரிக்கப்படும். அனைத்து தரப்பினரும் அந்த இலக்கை அடைய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இதுவரை காலமும் புரையோடி போயிருந்த பிரச்சினைகளுக்கு இனிவரும் காலங்களிலாவது சிறந்த தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். அனைத்து விடயங்களையும் அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து ஒரு போதும் தீர்வு பெற்றுக் கொள்ள முடியாது என்றார். (ம)

# 14 வயது பாடசாலை மாணவி ஊரெழுவில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், ஊரெழு பகுதியில் மாணவியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் அவரது வீட்டில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஊரெழு பகுதியை சேர்ந்த கமல்ராஜ் இலக்கியா என்ற 14 வயது மாணவியே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிசார் நடத்தி வருவதாக தெரிவித்துள்ளனர். (ம)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

# உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்த பெண்ணொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு உடல்நலக் குறைவு காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-60)

# விபரீதமுடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

## தெல்லிப்பழையில் சம்பவம்

(அராலி)

விபரீதமுடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் தெல்லிப்பழையில் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, தெல்லிப்பழை கிழக்கு பகுதியில் வசித்துவந்த 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

அவரது குடும்பத்தவர்கள் நேற்று காலையில் எழுந்து பார்த்தபோதே அவர் தூக்கில் சடலமாக தொங்கியதனை அவதானித்தனர்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-104)

## மனைவியை கண்டுபிடித்து தருமாறு கோரி

# தொலைத் தொடர்பு கோபுரம் மீது ஏறி வவுனியாவில் இளைஞன் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா தேக்கவத்தை பகுதியில் உள்ள 200 அடி உயரமான தொலைத் தொடர்பு கோபுரத்தின் மீதேறி எதிர்ப்பில் ஈடுபட்ட இளைஞர் ஒருவரும் அவரது சகோதரரும் மீட்கப்பட்டுள்ளனர்.


காணமல்போனதனது மனைவியை கண்டுபிடித்து தருமாறு பொலிஸில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்து இளைஞர் ஒருவரும் அவரது சகோதரரும் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த இருவரில் ஒரு இளைஞர் மல்லாவி பகுதியை சேர்ந்த பெண் ஒருவரை பதிவுத் திருமணம் செய்துகொண்டார்.

பின்னர் அவருடன் வவுனியா தேக்கவத்தை பகுதியில் அமைந்துள்ள வீட்டில் சிலகாலம் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்தநிலையில் கடந்த 21 ஆம் திகதி வீட்டிற்கு வந்திருந்த பெண்ணின் உறவினர்கள் வாகனம் ஒன்றில் குறித்த பெண்ணை அழைத்து சென்றுள்ளனர்.

இந்தநிலையில் பெண்ணின் குடும்பத்தினர் தம்மை தாக்கி விட்டு தமது மனைவியை கடத்திச்சென்றதாக குறித்த இளைஞர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.



எனினும் குறித்த விடயத்தில் எந்த நடவடிக்கையினையும் பொலிஸார் எடுக்கவில்லை என தெரிவித்து வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீதேறி அந்த இளைஞர் எதிர்ப்பில் ஈடுபட்டார். (ம-250,299)

# வடக்கில் மேலும் ஐவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மேலும் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று 66 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஐந்து பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 2 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

# கொரோனா தொற்றால் நாட்டில் மேலும் 20 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 20 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் உயிரிழந்தவர்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13,674 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 30 வயதுக்கு உட்பட்ட எவரும் உயிரிழக்க வில்லை. 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 12 பேரும் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

30-59 வயதுக்கு இடைப்பட்டோரில் 5 ஆண்களும் 3 பெண்களும், 60 வயதுக்கு மேற்பட்டோரில் 6 ஆண்களும் 6 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# கனகராயன்குளம் பிரதேச சபையில் கழிவகற்றல் உழவு இயந்திரம் விபத்து

## 4 பேர் படுகாயம்

(வவுனியா)

கனகராயன்குளம் பகுதியில் பிரதேச சபையின் கழிவகற்றும் உழவு இயந்திரமும், ஹயஸ் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் காயமடைந்துள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கழிவகற்றும் உழவு இயந்திரம் கழிவுகளை ஏற்றிக்கொண்டு ஏ9 வீதியில் புளியங்குளம் நோக்கி பயணித்து கொண்டிருந்தபோது அதே வீதி வழியாக வந்த ஹயஸ் ரக வாகனம் கனகராயன்குளம் பகுதியில் வைத்து கழிவகற்றும் உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தையடுத்து ஹயஸ் ரக வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதுடன், கழிவகற்றும் உழவு இயந்திரமும் கடும் சேதத்திற்கு உள்ளாகியது. குறித்த விபத்தில் இரு வாகனங்களிலும் பயணித்த 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-250)

# ஆரியகுளத்தில் எந்தவிதமான மத அடையாளங்களையும் அமைக்க முடியாது

## மாநகர சபையில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

**யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான ஆரியகுளத்தில் எந்தவிதமான மத அடையாளங்களையும் அமைக்க அனுமதிக்க முடியாது என யாழ். மாநகர சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு குறித்த தீர்மானத்தினை நாக விகாரையின் விகாராதிபதிக்கு அனுப்பி வைப்பதாகவும் நேற்றைய அமர்வின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் போது முதல்வர் கருத்து தெரிவிக்கையில்,

நான் ஒரு மதவாதி அல்ல. அத்தோடு பௌத்த மதத்துக்கு எதிரானவும்அல்ல.நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன்.

ஆனால் ஏனைய மதங்களுக்கு எதிரானவன் அல்ல. என்னை மதவாதி என சித்திரிக்கும் வகையில் நாக விகாரை விகாராதிபதியினால் யாழ்.மாநகர முதல்வர் என எந்தவித மரியாதையும் வழங்காது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே என்னை தவறான புரிதலுடன் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளதோடு. அப்பகுதி புனித பிரதேசமாக இருக்க வேண்டும். நான் ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு தமிழன். அந்த வகையில் நாம் எதிர்காலத்தில் அடையக்கூடிய தமிழ்த் தேசம் ஒரு மதச் சார்பற்ற இடமாக அனைத்து மத மக்களும் தாம் விரும்பிய மதத்தை வழிபடுகின்ற அல்லது தங்களுடைய மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்ற இடமாக கட்டி அமைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

(நி-5-18-33-104)

## இந்திய மீனவர்களை விடுதலை செய்ய ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது படகு விபத்துக்குள்ளாகிய நிலையில் கைதான இரண்டு இந்திய மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் கடலில் வீழ்ந்த மீனவர்களில் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டபோதிலும் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார்.

மீட்கப்பட்ட மீனவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்றிருந்த நிலையில் அவர்களை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(4-5-33-100)


## ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

அடிமைத்துவத்தின் சமகால போக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடா இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை பற்றிய அறிக்கை யிடலுக்காக நவம்பர் மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், மனித கடத்தல் மற்றும் நவீன முறையிலான அடிமைத்தனம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர் என்பதுடன் மனித கடத்தல் தொடர்பான வடக்கு அயர்லாந்து சட்டசபை குழு, போதைப்பொருள் மற்றும் குற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின்



அலுவலகம், இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு என்பனவற்றில் அவர் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(நி)

## தேர்தல் விதிமுறைகளை சட்டமாக்க தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் காலங்களில் விதிமுறைகள் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படுவதாகவும் அவற்றை மீறுபவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை எனவும் எனவே, தேர்தல் விதிமுறைகளை சட்டபூர்வமாக்க தீர்மானிக்கப்பட்டதாகவும் அந்த ஆணையகம் தெரிவித்துள்ளது.

(நி)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். நிபோஜனா பாலசுப்பிரமணியம்

யாழ்.சுன்னாகம்
ஸ்கந்தவரோதயா கல்லூரி
2019 உயர்தர மாணவி

தோற்றம்: 2000.12.20
மறைவு: 2020.11.08

ஆண்டொன்று கடந்து
விட்டது
நினைவுகளும் வலிகளும்
மறையவில்லை
அன்பினால் பண்பினால்
குணத்தினால்
ஆளுமையால்
எம் அனைவரது
உள்ளத்திலும்
ஆழமாய் குடியிருந்து
விடைபெற்று
சென்றதேனோ...?
ஆலமர விழுதுகள்
போல் உன்
ஆயிரம் உறவுகள் இன்று
உன்
பிரிவால்
தவிக்கின்றோம்...

(8407)

கூவில், கீரிமலை. குடும்பத்தினர்

## மே.தீவுகள் அணியை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



நடப்பு சாம்பியன் மேற்கிந்திய தீவுகள் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தென்னாபிரிக்கா முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது.

இருபது-20 உலகக் கிண்ணத்தில் 'சுப்பர் 12' சுற்றில் நேற்று முன்தின ஆட்டத்தில் குரூப் 1 இல் இடம் பிடித்துள்ள மேற்கிந்திய தீவுகள்-தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

டாஸ் வென்ற தென்னாபிரிக்கா பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி மேற்கிந்திய தீவுகள் முதலில் பட்டிங் செய்தது. லீவிஸ் 35 பந்தில் 56 ரன்கள் விளாசினார். அவர் ஆட்டமிழக்கும்போது மேற்கிந்திய தீவுகள் 10.3 ஓவரில் 73 ரன்கள் குவித்திருந்தது. இதனால் 20 ஓவரில் 150 ரன்னை எளிதாக தாண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சிம்மன்ஸ் 35 பந்தில் 16 ரன்களும், பூரன் 7 பந்தில் 12 ரன்களும், கிறிஸ் கெய்ல் 12 பந்தில் 12 ரன்களும், பொல்லார்டு 20 பந்தில் 26 ரன்களும், அந்த்ரே ரஸல் 4 பந்தில் 5 ரன்களும் அடித்து ஏமாற்றம் அளித்தனர். இதனால் மேற்கிந்திய தீவுகள் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 143 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது.

பின்னர் 144 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் இறங்கியது. டெம்பா பவுமா, ரீஜா ஹென்ரிக்ஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். டெம்பா பவுமா 2 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வான் டர் டஸ்சன் களம் இறங்கினார். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஹென்ரிக்ஸ் 30 பந்தில் 39 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 3 ஆவது விக்கெட்டுக்கு வான் டர் டஸ்சன் உடன் எய்டன் மார்கிராம் ஜோடி சேர்ந்தார்.

எய்டன் மார்கிராம் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 26 பந்தில் 51 ரன்கள் விளாச தென்னாபிரிக்கா 18.2 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 144 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் தென்னாபிரிக்கா 2 போட்டிகளில் விளையாடி ஒன்றில் வெற்றி பெற்றுள்ளது. ஒன்றில் தோல்வியடைந்துள்ளது. மேற்கிந்திய தீவுகள் இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. (4-6)

## அரையிறுதிக்கான வாய்ப்பை தக்கவைத்தது பாகிஸ்தான்



உலக கிண்ணக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில், நியூசிலாந்து அணியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தி பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஷார்ஜாவில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் நியூஸிலாந்து அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் நிறைவில் 134 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனை அடுத்து 135 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 18.2 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணிசார்பாக சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட்களை வீழ்த்திய ஹரிஸ் ரவூப் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் 4 புள்ளிகளை பெற்றுக் கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அரை இறுதிக்கு செல்வதற்கான தனது வாய்ப்பை அதிகரித்துள்ளது. (4-6)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2437 facebook

### வித்தியா

என்னங்க முதலாளி இன்னமும் கம்முனே இருக்கிங்க..?




ஆத்தி..! இவன் இன்னைக்கு தீபாவளி போனஸ் வாங்கமே போக மாட்டான் போல..!

### சரன்

தீபாவளிக்கு துணி எடுக்க போனா...



எல்லா கடையிலும் கேமரா வச்சிருக்கானுங்க.. எப்படி வல்லரசு ஆகும் நாடு..

### சபித்




அம்மா சாப்பிட snacks எதுவுமே இல்ல பொட்டுகடல எடுத்துக்கிட்டேன்




டேய்.. டேய்.. வேணாட சட்னி அரைக்க வேணுட உனக்கு வேற ஏதாச்சும் வாங்கி தரேன் அதை விட்டிடா?

### கார்த்திக்

இன்னும் பத்து நாள்-ல தீபாவளி.. வரவர பண்டிகை நாள் கூட Normal Day மாரி தோனுது...



வயசாயிடுச்சு போல...

### யஸ்வினன்

அவ்வளவு எளிதில் அமைந்து விடுவது இல்லை!
ஆண்களுக்கு வேலையும்!





பெண்களுக்கு சேலையும்!

### தர்சிகா



ஏய், பாருடா உன்ன மாரி அழகான பையனை இதுவரைக்கும் நாங்க பாத்தது இல்ல ஒழுங்கா எங்கள லவ் பண்ணு



முடிவே முடியாது எங்க அம்மா யாரையும் லவ் பண்ணக்கூடாதுனு சொல்லியிருக்காங்க போங்கடி..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

28.10.2021
ஐப்பசி 11, வியாழக்கிழமை
சப்தமி முற்பகல் 09.21 மணிவரை
புனர்பூசம் காலை 7.11 மணிவரை
சுபநேரம்- 7.33-9.03 மணிவரை
இராகு காலம்- 1.33-3.03 மணிவரை
சந்திராஷ்டமம்- பூராடம்

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மிதுனம்

பேச்சில் கனிவு பிறக்கும், தனவரவு திருப்திகரமாக அமையும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கடகம்

சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


சிம்மம்

திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்க பூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், காரிய அனுகூல முண்டு.


விருச்சிகம்

எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.


தனுசு

திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் மன உழைச்சல் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.


மகரம்

குடும்பத்தில் மகிழ்ச்சி சந்தோசம் அதிகரிக்கும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், வருமானம் திருப்தி தரும்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மீனம்

புண்ணிய காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள் அரைகுறையாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

சாவைக்கண்டு பயப்படாமலிருந்தால் நீ ஒருமுறை மட்டுமே சாவாய்

# 60 வீதமானோருக்கு இதுவரை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

**நாட்டில் 60 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.**



நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு மூன்றாவது கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கு தேவையான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-5)

## விமான நிலையத்துடன் இணைந்த பி.சி.ஆர் ஆய்வு கூடம் மீண்டும் திறப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்துடன் இணைந்த பி.சி.ஆர் மருத்துவ ஆய்வு கூடம் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதல்தடவையாக நேற்று புதன் கிழமை அதிகாலை 2.15 மணிக்கு கட்டாரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்த பயணிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பி.சி.ஆர் பரிசோதனையொன்றுக்காக 40 அமெரிக்க டொலர் கட்டணம் அறவிடப்படுவதுடன், பரிசோதனை முடிவுகள் மூன்று மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பிள்ளைகளை கொலை செய்த இலங்கைத் தாய் இத்தாலியில் துயரம்

(வெனிஸ்)

இத்தாலியில் வெரோனா நகரத்தில் உள்ள பெண்கள் காப்பகத்தில் தன்னுடன் இருந்த இரண்டு பெண் பிள்ளைகளை இலங்கைத் தாய் ஒருவர் கொலை செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுவரை கொலைக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இலங்கையை பூர்வீகமாக கொண்ட 33 வயதுடைய சச்சித்ரா நிசன்சலா பெர்னாண்டோ தேவ்த்ரா மஹவடுகே என்பவர் தனது சாபதி (11 வயது) மற்றும் சாந்தனி (03 வயது) மகள்களுடன் ஜனவரி மாதம் முதல் இத்தாலியில் வெரோனா நகரத்தில் வசித்து வந்துள்ளார்.

வெனிஸ் சிறுவர் நீதிமன்ற உத்தரவின் கீழ் இரு பிள்ளைகளும் அவர்களின் தந்தையிடமிருந்து பிரிந்து தாயுடன் வசித்து வந்துள்ளார்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை குறித்த இரு பிள்ளைகளும் அவர்களின் தாயால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து தாய் தற்போது தலைமறைவாகியுள்ளார். குறித்த இரு பெண் பிள்ளைகளின் மரணமும் அந்த நகரத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (நி-5)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஜீப் ரக வாகனம் அறிமுகம்

(கொழும்பு)

30 சதவீதமான உள்ளூர் பெறுமதியுடன், முதல் முறையாக உள்நாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட ஜீப் ரக வாகனம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மத்துகம - வெலிபன்ன பகுதியில் உள்ள வாகன ஒருங்கிணைப்பு மையத்தில், கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிலையான இயக்க நடைமுறைகள் எனப்படும் எஸ்.ஓ.பி முறைமை அறிமுகத்துடன், இலங்கையில் வாகன ஒருங்கிணைப்பு



கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தங்களது உள்ளூர் பெறுமதி சேர்ப்பை அதிகரித்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, "மேட் இன் ஸ்ரீலங்கா" என்ற வர்த்தக நாமத்தைக் கொண்ட வாகனங்கள், வீதிகளில் பயணிக்கும் எதிர்காலத்தை நோக்கி தடம் பதிக்க முடியும் எனத் தாம் நம்பிக்கை கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# அயல் வீட்டார் நடத்திய தாக்குதலில் வயோதிப தம்பதிகள் படுகாயம்

## மிருசுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் அயல் வீட்டார் அத்துமீறி அருகில் இருந்த வயோதிபர்களின் வீட்டுக்குள் புகுந்து மேற்கொண்ட தாக்குதலில் வயோதிபத் தம்பதிகள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மிருசுவில் தவசிக்குளம் பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில், 69 வயதான கணவனும், 52 வயதான அவரது மனைவியும் காயமடைந்துள்ளனர். அயல்வீட்டார் தம் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தம் மீது தாக்குதலை மேற்கொண்டதாக தாக்குதலுக்கு இலக்கான தம்பதிகள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-33)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 இன் IIஆம் அரையாண்டிற்கான, மற்றும் தேசிய தொழில் தகைமை மட்டம் 6 இன் Iஆம் அரையாண்டிற்கான பரீட்சை - 2021 NVQ Level-5 Semester-II, & NVQ Level - 6, ,Semester-1,) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 05/11/2021 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (4-5)

# நாய் குறுக்கே பாய்ந்ததில் தந்தை, மகள் படுகாயம்

(அராலி)

நாய் வீதிக்கு குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 36 வயதுடைய தந்தையும் 5 வயதுடைய மகளும் படுகாயமடைந்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி பகுதியிலேயே குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பண்டத்தரிப்பில் நடைபெற்ற திருமண நிகழ்விற்குச் சென்று கொண்டிருந்த வேளையே இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4-5-104)

# சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு அயராது உழைத்தவர் சைவப்புலவர் செல்லத்துரை

## நீதியரசர் விக்னேஸ்வரன் இரங்கல்

(யாழ்ப்பாணம்) .

இளவாலையைச் சேர்ந்த சைவப் புலவர் கலாபூஷணம் சு.செல்லத் துரையின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சைவக்குழந்தைகள் அனைவரும் பண்ணோடு தேவாரம் பாடப்பழக வேண்டும் என்ற கருத்தை உடையவராக இருந்தார்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் தமது ஓய்வின் பின்னரும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பல வழிகளில் முயன்றதுடன் அகில இலங்கை திருமுறைக் கலாமன்றத்தின் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றி ஆலயம் தோறும் திருமுறைகள் பண்ணோடு ஒலிக்க அயராது உழைத்தவர்.

சிறந்த சமயப் பேச்சாளர், நாடக ஆசிரியர், எழுத்தாளர் என பல பரிமாணங்களுடன் சைவப் புலவர் சங்கம், சைவ சித்தாந்த மையம், சைவ பரிபாலனசபை, கொழும்பு தமிழ்ச் சங்கம், தெல்லிப்பளை கலை இலக்கியக் கழகம் என பல அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து பல அரிய சேவைகளை ஆற்றியவர்.

சைவப் புலவர் சங்க உப தலைவராக, சைவப் புலவர் சங்கத்தின் செயலாளராக, தேர்வுச் செயலாளராக அரும்பணியாற்றி பல சைவ சித்தாந்தப் புலவர்களை உருவாக்கி எமக்களித்த பெருமைக்குரியவர்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பணிகின்றேன் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5)

# ஓமந்தையில் துப்பாக்கி மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா - ஓமந்தை பகுதியில் இருந்து கட்டுத் துப்பாக்கி ஒன்றினை இராணுவத்தினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர். ஓமந்தை பகுதியில் ஆயுதம் இருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலிற்கமைய அப்பகுதிக்கு சென்ற இராணுவத்தினர் கைவிடப்பட்ட நிலையில் இருந்த கட்டுத் துப்பாக்கி ஒன்றினை மீட்டு ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மீட்கப்பட்ட கட்டுத்துப்பாக்கியை நீதிமன்றில் ஒப்படைக்கவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவும் ஓமந்தை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-299)

## பண்டிகை தினங்களில் சேவை இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலை பொது விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிமைகளில் சேவை வழங்கி வருகிறது.

இருந்த போதிலும் பண்டிகை தினங்களில் (பொது விடுமுறை) கால்நடை வைத்தியசாலையில் சேவை இடம்பெறமாட்டாது என யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலை கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார். (4-5)

# வரியிறுப்பாளர்களுக்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை யாழ். மாநகர சபையால் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

9,10 மற்றும் 11 ஆம் வட்டாரங்களிற்கான பெயர்மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இதுவரை காலமும் செலுத்த வேண்டியுள்ள சோலை வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலைவரி, தண்ணீர் வரி போன்றவற்றை செலுத்துமாறு யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி யாழ். மாநகர முதல்வர் மணி வண்ணன் தெரிவித்துள்ளார்.(4-5)

# உறவினர்களுக்கிடையே கைகலப்பு இருவர் படுகாயம்

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கோடரி தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் தெல்லிப்பளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)



அண்மையில் கந்தன் கழலடியை அடைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பத்தாவது எஜமான் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாருக்கு யாழ். மாநகர சபையில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்:-ரவிசாந்)

# பிரதேச சபையின் செயலாளரை இடமாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மன்னார்- மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளரை இடமாற்றக்கோரி மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆதி அருணாச்சலம் தலைமையில் சபை உறுப்பினர்களால் நேற்று புதன்கிழமை மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று சபை உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டது.



யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாந்தை மேற்கு பகுதியில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளர் தொடர்ந்தும் அசமந்த போக்குடன் செயற்படுவதாகவும் சபை தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அலட்சியம் காட்டுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விரைவில் புதியதொரு செயலாளர் ஒருவரை நியமிக்குமாறும் அவ்வாறு நியமிக்காத பட்சத்தில் இன்னும் பல போராட்டங்களை மேற்கொள்ள தயாராக உள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (4-5-285-286)

# டெல்டா பிறழ்வு ஏற்படலாம்

## சுகாதார விதிமுறைகளை கடைப்பிடியுங்கள்

### வைரஸ் தொடர்பான மருத்துவ ஆலோசனை நிபுணர்

(கொழும்பு)

**டெல்டா வைரஸின் மரபணு மாற்றங்கள் ஊடாக தடுப்பூசியால் கட்டுப்படுத்த முடியாத பிறழ்வு ஏற்படுவதற்கான வழிகள் காணப்படுகின்றன.**

அதனால் தொடர்ந்தும் சுகாதார பாதுகாப்புடனே எமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என வைரஸ் தொடர்பான மருத்துவ ஆலாசேனை நிபுணர் நதீக ஜானகே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது கொவிட் தொற்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றாலும் இந்த நிலையை தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள முடியுமா? என்ற கேள்வியும் இருக்கிறது.

கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக இடம்பெறுவதால் இந்த கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. முன்னர்போன்று தற்போது மருத்துவமனைகளில் கொவிட் நோயாளர்கள் அதிகம் இல்லை.

என்றாலும் கொழும்பு பல்கலைக் கழகம் மற்றும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து இந்த வைரஸின் மரபமனு மற்றும் வீரியம் தொடர்பான ஆராய்ச்சியகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதில் எமக்கு கிடைத்த பெறுபேறுதான் டெல்டா ஆரம்ப பிறழ்வுகள் மேலதிகமாக உப பிறழ்வுகள் உருவாகி வருவதாகும். என்றாலும் இந்த டெல்டா உப பிறழ்வுகள் பிரதான டெல்டா வைரஸ்போன்றே செயற்படுகின்றன. அதில் பாரிய பாதிப்புகளை காணவில்லை. அதனால் இந்த வைரஸுடன் எங்களுக்கு வாழ்வதில் பாதிப்பு இல்லை.

என்றாலும் இந்த வைரஸ் பரவலை முடியுமானவரை கட்டுப்படுத்திக் கொள்ளவே நாங்கள் முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்போதாவது ஒருநாள் இந்த வைரஸின் மரபணு மாற்றங்கள் மூலம் தடுப்பூசியால் கட்டுப்படுத்த முடியாத பிறழ்வு ஏற்படுவதற்கு இடமிருக்கின்றது. அதனால் நாங்கள் தொடர்ந்தும் சுகாதார பாதுகாப்புடனே எமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# குடியிருப்புக்குள் நுழைந்த முதலை

(தருமபுரம்)

மழை வெள்ளத்துடன் குடியிருப்புக்குள் நுழைந்த முதலை பாதுகாப்பாக பிடிக்கப்பட்டது. நேற்று அதிகாலை கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் உள்ள குடியிருப்பு காணிக்குள் புகுந்த முதலையை அவதானித்த குடியிருப்பாளர் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

தொடர்ந்து, குறித்த முதலை பாதுகாப்பாக பிடிக்கப்பட்டு மக்கள் நடமாட்டமற்ற முறிகண்டி குளத்தினை அண்மித்து விடுவிக்கப்பட்டது. (4-5-316)

**94 வது பிறந்த தினமும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

கடந்த 28.09.2021 அன்று
இறைபதமடைந்த எங்கள் குலவிளக்கு

**அமரர்.கணபதிப்பிள்ளை செல்வநாயகம்**



அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகள் 28.10.2021
இன்று வியாழக்கிழமை அதிகாலை
4.00 மணியளவில்
ஆயில்நின்றொல்லை
வல்லியானந்தப்பிள்ளையார் ஆலயத்
திற்கு அருகாமையில் நடைபெற்று
ஆத்மசாந்தி சபிண்டீகரண கிரியைகள்
மு.ப.11.00 மணியளவில் அன்னாரது
இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசன
நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஊறெல்லைத்தெரு,
துன்னாலை வடக்கு, கரவெட்டி. (8400)

குடும்பத்தினர்
021 226 3583

# சவேந்திர சில்வாவுக்கு ரஷ்யாவில் ராஜமரியாதை

(கொழும்பு)



ரஷ்ய பாதுகாப்பு படை களின் தளபதி ஒலெக் சல்யு கோவின் அழைப்பின் பேரில் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற் கொண்டிருந்த இலங்கை இராணுவத் தளபதி ஜென ரல் சவேந்திர சில்வாவுக்கு அங்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது என இராணுவ ஊடகப்பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் போது, இருதரப்பு நலன்புரிச் செயற்பாடுகள், இலங்கை முப்படையினருக்கான பயிற்சித் தளங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல், இராணுவ கூட்டு பயிற்சிகள், இயந்திர மற் றும் பொறியியல் தொழில் நுட்பங்கள் பற்றிய அறிவு பரிமாற்றம் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பிலான கருத்து பரிமாற்றங்களும் இடம்பெற்றன. (நி-5)

# தரையிறங்கிய சொகுசு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுமா?

(கொழும்பு)

வாகனங்களை இறக்கு மதி செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ள போதிலும் சுமார் 400 சொகுசு வாகனங்கள் கொழும்பு துறைமுகத்தில் தரையிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தரையிறங்கிய வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுமா? இல்லையா? என இலங்கை சுங்க திணைக்களம் நிதி அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்த நிலையில் இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தற்போது அந்த வாகனங்கள் சட்டத்திற்கு முரணாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தனது கடிதத்தில் தெரிவித்துள் ளது.

இந்த வாகனங்களில் பெரும்பாலானவை ஜப்பான் மற்றும் பிரிட்டனில் இருந்து உரிம முறையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

**காயமறுக்கும் ஈரவிழிகளுடன் கடந்தது ஈராண்டு**



தாய் மடியில்
19.01.1951

இறைவன் அடியில்
21.10.2019

திதி: 28.10.2021

**அமரர். லயன் க.ம. இராஜேந்திரன் J.P.**
ஓய்வுநிலைக் கணக்காளர்

முன்னாள் கணக்காளர்: மாவட்ட அபிவிருத்தி சபை- யாழ். கச்சேரி (மாவட்ட செயலகம்), மாநகர சபை- மட்டக்களப்பு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம். NECORD- முல்லைத்தீவு, கிளிநொச்சி.
முன்னாள் தலைவர்: யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம், கோண்டாவில் அரிமா கழகம்
முன்னாள் உப தலைவர்: யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவர் சங்கம்
முன்னாள் பொருளாளர்: கோண்டாவில் ஞானவீர சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்
பொருளாளர்: கோண்டாவில் செம்மாந்தோட்ட ஞானவைரவர் ஆலயம், வடமாகாண இந்து அமைப்புக்களின் ஒன்றியம்
மத்தியஸ்தர்: மத்தியஸ்த சபை, யாழ்ப்பாணம்.

அவனியில் அதியற்புதங்களில் ஒன்றாய் வாழ்ந்து
ஆறாத அன்புக்கு இலக்கணமாய்த் திகழ்ந்திட்ட எந்தையே!
இகபர இன்பத்தை அள்ளித் தந்தே காத்திருந்த தெய்வமே!
ஈடு இணையில்லா பெருமை சேர்த்த ஏந்தலே!
உலக நடையறிந்து ஒழுகக் கற்றுத்தந்த ஆசானே!
ஊக்கம் உயர்வுதரும் என்று காண்பித்த தலைவனே!
எவ்வேளையிலும் நெறிதவறா வாழ்வு தந்த வள்ளலே!
ஏணிக்கு நிகராய் நின்றேற்றிவிட்ட பெருமகனே!
ஐக்கியமான வாழ்வுக்கு உதாரணமாய்த் திகழ்ந்தோனே!
ஒற்றுமைகாக்க ஒருப்பட்டு நின்ற சமாதான நீதிபதியே!
ஓதுவது ஒழியேல் என்று இளையோர் மனமதிலே
ஔஷதம் பொழிந்த வண்மைசேர் அண்ணலே!
இஃது

வசந்தம் பொழிவிழந்து மங்கியது
ஆர்த்திகம், பிரவினாவோடு ஆதரவு காணாது வெந்து துடித்தது
தர்சிகம் அமர்நாத்தொடும் நிலையற்றுக் கலங்கியது
ஆருஜன், ஆரவி, சித்திக், ஆத்மிகா, ஆதவனும் அள்ளி அணைக்கத்
தோள்களைத் தேடிற்றே!
நின் கனவதே சுமந்தது அஜந்தன்காண் அறிவாய் நீ!
ஆனாலும், பொருக்கென விரைந்தாய் விண்ணுலகம்
சருகென ஆனோம் சத்தியமே!
உற்ற உறவுகள் தம் மனப்பலம் குன்றினர்
நட்பினார் தம்நலம் இழந்தனர் பாரில்- நீ
காலத்தின் கட்டளையைப் பின்பற்றி வற்சரம் கழிந்தது
இன்னும் வச்சிரமாய் உன் நினைவு...

**ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்**

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில். (C-7897) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி.சிவலோகநாதன் யோகேஸ்வரி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 | 26 |
| 08 | 10 |
| 1965 | 2021 |



கிளிநொச்சி கண்டாவளை வெளிக்கண்டல் சந்தியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் யோகேஸ்வரி அவர்கள் 26-10-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்ற விநாசித்தம்பி, நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், வல்லி நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவலோகநாதன் அவர்களின் ஆசை மனைவியும், காலஞ்சென்ற யோகராசா (யோகன்- சுழிபுரம்), உதயகுமார் (உதயன் - வெளிக்கண்டல்), காலஞ்சென்ற உதயகுமாரி(வனிதா), சந்திரகுமார் (சந்திரன் - கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காந்தரூபன் (கண்ணன் - லண்டன்), சுபாசினி (சுமதி- லண்டன்), சுலக்சனா (குட்டி- வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தரணிதரன் (தரணி- கண்டாவளை) அவர்களின் பாசமிகு பெரியம்மாவும்,

அன்ரனிறாஜ் (சுதா- லண்டன்), சியாழினி (சாளி- லண்டன்), அரவிந்தன் (அக்சவி- Engineering, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,கந்தசாமி, காலஞ்சென்ற யோகலட்சுமி ஆகியோரின் பெறாமகளும், அற்புதராணி(வெளிக்கண்டல்), அற்புதமலர் (ஆசிரியை- கிளி/ புன்னை நீராவி அ.த.க பாடசாலை), காலஞ்சென்ற அற்புதமாலா, அமுதராணி (கரைச்சி பிரதேச சபை), குமுதராணி(வெளிக்கண்டல்), தவரூபன்(வெளிக்கண்டல்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பானு, பவானி(கைதடி), மதி(வவுனியா), அப்பன்(பிரான்ஸ்), ரவிச்சந்திரகுமாரி(வெளிக்கண்டல்), றாதா(கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காண்டி(பிரான்ஸ்), கயந்தி(யாழ்ப்பாணம்), பரணி(உப தபாலதிபர், மட்டக்களப்பு), அரங்கன்(அவசர அம்புலன் சாரதி), ரூபன்(கொடிகாமம்), யனோ(லண்டன்), சறோமி(ஜேர்மனி), சங்கழகி(கிளி- முருகானந்தா கல்லூரி), அபி, அகலி ஆகியோரின் பாசமிகு அத்தையும்,காலஞ்சென்றவர்களான துளசி, கபின் மற்றும் வினோ, விருஷா, சிந்துயா, தாரகாந்தன்(NSB Bank), ஆருஜன், அனோஜிதா, கஸ்வினி, கஸ்னிகா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், சாந்ததேவி(வட்டக்கச்சி), ஞானம்மா(திருகோணமலை), மகேஸ்வரி(வவுனியா) ஆகியோரின் சம்மந்தியும், டிருசன்(டிரு- லண்டன்), திவாயினி(திவா- லண்டன்), டினுயா(டினு- லண்டன்), அக்சவி(வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை 28.10.2021 இன்று முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்டாவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு

சிவலோகநாதன் - கணவர் - +94777749972
காந்தரூபன்(காந்தன்) - மகன் - +447446105144
அரவிந்தன் - மருமகன் - +94778677814
அன்ரனிறாஜ்(சுதா) - மருமகன் - +447400292512
உதயகுமார்(உதயன்) - சகோதரன் - +94770734984

தகவல்: குடும்பத்தினர்
வெளிக்கண்டல்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

(C-2891)

# வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வாநகர் பகுதியில் நேற்று முன்தினம் தனியார் காணியை பயிர்ச் செய்கைக்காக பண்படுத்திய போது மண்ணுள் புதைந்த நிலையில் குண்டு ஒன்று இனங்காணப்பட்டது.

இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய பொலிஸார் சம்பவயிடத்துக்கு சென்று பார்வையிட்டதுடன் நீதிமன்ற அனுமதியுடன் குண்டை செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(4-5-316)

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறிய 250 பேருக்கு எதிராக நடவடிக்கை

(நெளுக்குளம்)

**வவுனியாவில் கடந்த மாதம் முதல் நேற்று வரையான காலப்பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றத்தவறிய 250 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இது குறித்து மேலும் தெரிவிக்கையில் , வவுனியாவில் கடந்த மாதம் முதல் நேற்று வரையான காலப் பகுதியில் வீதிகளில் சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்ட பலருக்கு எதிராக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையின்போது முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளிகள் உட்பட சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்ட சுமார் 250 பேருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . இவ்வாறு பொலிஸாரால் தொடர்ந்தும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தேவை இன்றி நகரில் நடமாடுவதை தவிர்க்குமாறும், சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளை பொது மக்கள் பின்பற்றி நடக்குமாறும் பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-5-299)

# வவுனியாவில் காற்று,மழையால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை மற்றும் காற்று என்பவற்றினால் பாதிப்படைந்த 21 வீடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருவதுடன், அவ்வப்போது காற்றும் வீசி வருகிறது. இதனால் குளத்து நீர் மட்டம் அதிகரித்து வருவதுடன் சில தாழ் நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம், இராசேந்திரகுளம், விக்ஸ்காடு ஆகிய பகுதிகளில் 15 வீடுகளும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் சூடுவெந்தபுலவு பகுதியில் 6 வீடுகளும் ஆக 21 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறித்த வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து பிரதேச செயலகம் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளதுடன், 21 வீடுகளுக்கும் [illegible]மாக இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (4-5-250)

# கௌதாரிமுனை வீதியை விரைந்து புனரமையுங்கள்

## பிரதேசசபை உறுப்பினர்

(அக்கராயன் )

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை வீதி புனரமைப்பு விரைவாக இடம் பெற வேண்டும் என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் இ.பூபாலசிங்கம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.


பூநகரி பரமன்கிராய் சந்தியில் இருந்து கௌதாரி முனையின் கல்முனை வரையான 18 கிலோமீற்றர் வீதி புனரமைப்பின்றி காணப்படுகிறது. வீதி புனரமைக்கப்படும் போது குறைந்தது 05 அடி உயரத்திற்கு வீதி அமைக்கப்பட வேண்டும்.

காரணம் தற்போது கடல் நீர் மழை காலங்களில் வீதியைக் கடந்து நன்னிலங்களுக்கு பரவுகின்ற நிலைமை காணப்படுகின்றது. வீதியை உயர்த்திப் புனரமைப்பதன் மூலம் கடல் நீர் நன்னிலங்களுக்கு பரவாத நிலைமை உருவாகும்.

முக்கிய இடங்களில் பாலங்கள், மதகுகள் அமைக்கப்பட வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் கௌதாரிமுனை புனரமைப்பிற்கான எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மண் மேடுகள் வீதியில் சரிந்து விழுகின்ற போது போக்குவரத்துகள் தடைப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

எனவே இவ் வீதியைப் புனரமைப்பதன் மூலம் மக்களின் போக்குவரத்து இலகுவாக்கப்படும். (4-7-350)

# பளையில் பாவற் கொழுந்துகளை வெட்டி வீசிய விசமிகள்



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தர்மக்கேணி பகுதியில் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த பாவற் கொழுந்துகள் விசமிகளால் வெட்டி சேதமாக்கப்படுத்தப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தர்மக்கேணி பகுதியில் விவசாயத்தையே தனது வாழ் வாதாரமாக செய்து வந்துள்ள விவசாயியின் காணியில் பயிரிடப்பட்டுள்ள பாவற்காய் கொழுந்துகள் கடந்த 25 ம் திகதி சில விசமிகளால் வெட்டி வீசப்பட்டுள்ளன.சுமார் நூறுக்கும் மேற்பட்ட பாவற் கொழுந்து சேதமாக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

(4-5-316)

# சிங்கள குடியேற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியாவில் இடம் பெற்று வரும் சிங்கள குடியேற்றத்தினை கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பழைய பேருந்து நிலையம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனுராதபுரத்திற்குரிய பகுதியில் உள்ள மதவாச்சியில் உள்ள சிங்கள குடும்பங்களை வவுனியா வடக்குடன் இணைப்பதன் மூலம் இன வீதாசாரத்தை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் அரசின் இரகசிய நகர்வை எதிர்த்தே தமிழ் தேசிய மக்கள் முன்னனியினால் குறித்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-299)

# காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பொது மக்களின் பயிர் செய்கைக் காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் அதன் முன்னேற்றங்கள் தொடர்பிலும் குறித்த கலந்துரையாடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஆனைவிழுந்தான் பகுதியில் வனவள திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பு மற்றும் கரைச்சி கண்டாவளை பூநகரி பிரதேசங்களில் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்கள், மற்றும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(4-5-315)




மீன் பிடியில் தடைசெய்யப்பட்ட முறைகள் தொடர்பான சட்டத்தை உடனடியாக அமுல் படுத்து! என்ற தலைப்பில் முல்லைத்தீவு நகரின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 'தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினால் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

(படம்-தவசீலன்)

# தாக்குதல் நடைபெறப் போகிறது எனத் தெரிந்தும் நாட்டை விட்டு வெளியேற நான் முட்டாள் அல்ல

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை முன்கூட்டியே அறிந்து நாட்டை விட்டுவெளியேறும் அளவிற்கு பலவீனமான நபர் நான் அல்ல என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தாக்குதல் சம்பவம் குறித்து தான் ஆரம்பத்தில் அறிந்ததாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் முற்றிலும் பொய்யானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த சம்பவத்தை அரசாங்கம் என்ற ரீதியில் பொறுப்பேற்க தயாராக இருப் பதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, ஒருபோதும் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இரசாயன உரத்திற்கு தடை விதித்து சேதன பசளைக்கு செல்வது பெரும் பிரச்சினையை தோற்றுவிக்கும் என்பதனால் அத்திட்டத்தை கட்டம் கட்டமாக செயற்படுத்த வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபயவிடம் கோரியுள்ளதாக குறிப்பிட்ட மைத்திரி சேதன பசளை தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப் படவில்லை என்றும் குற்றம் சாட்டினார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## ஆனந்தம் தரும் அனுமன் வழிபாடு



**வழிபடும் முறை**

அனுமன் ஜெயந்தி அன்று விரதம் இருந்தால் சகல மங்களங்களும் உண்டாகும். நினைத்த காரியம் கைகூடும். துன்பம் விலகும். அனுமன் ஜெயந்தி விரதம் இருப்பவர்கள் அதிகாலை குளித்து உணவருந்தாமல், ஆஞ்சநேயர் கோவிலுக்கு சென்று துளசியால் அர்ச்சனை செய்ய வேண்டும். ஆஞ்ச நேயரை ராமநாமத்தால் சேவிப்ப தோடு, வடைமாலை, வெற்றிலை மாலை அணிவித்து, வெண்ணெய் சாத்தி வழிபட வேண்டும்.

வாலில் குங்கும பொட்டு வைத்து வழிபடுவது விசேஷமானது. அவல், சர்க்கரை, தேன், பானகம், கடலை, இளநீர் முதலிய பொருட்கள் அனுமானுக்கு மிக வும் பிடிக்கும். அதை ந்நைவேத்தியம் செய்து வழிபடலாம். அனுமானுக்கு வாலில் தான் சக்தி அதிகம். அதனால் தான் ஆஞ்சநேயர் வாலில் குங்குமம் வைத்து வழிபடுகிறோம். பக்தி சிரத்தையுடன் ராம நாம த்தை உச்சரித்துக் கொண்டு வால் தோன்றும் இடத்தில் இருந்து தின மும் சந்தனம் பூசி, குங்கும திலகம் வைத்துக் கொண்டு வர வேண்டும்.

வாலின் நுனியை அடைந்ததும் கலைத்து விட்டு மறுபடியும் பொட்டு வைக்க வேண்டும். வால் முனையில் பொட்டு பூர்த்தி பெறுகின்ற சுப தினத்தில் வடை மாலை சாத்தி வழிபட வேண்டும்.

மார்கழி மாதம் வளர்பிறை திரயோதசி அன்று 13 முடிச்சுகளோடு கூடிய மஞ்சள் கயிற்றை கலசத்திற்குள் வைத்து “ஓம் நமோ பகவதே வாயு நந்தனாய” என்ற மந்திரம் சொல்லி ஆவாஹனம் செய்து மஞ்சள், தனம், பூ மேலும் மற்ற பூஜை பொருட்களால் பூஜை செய்ய வேண்டும்.

கோதுமை மாவினால் தயார் செய்யப்பட்ட 13 பூரி, வெற்றிலை பாக்கு, தட்சணையோடு ஒரு தட்டில் வைத்து அந்தணருக்கு கொடுக்கலாம். மேலும் அந்த அந்தணருக்கு சாப்பாடும் போடலாம். அனுமான் விரத தொடக்கத்தில் இவ்வாறு செய்வதால் சகல காரியங்களும் வெற்றி அடையும். காலை உணவாக பொரியும், பழமும் சாப்பிட வேண்டும். இதை பிறருக்கும் வழங்கலாம். பகல் உணவாக கிழங்கு, காய்கறி களை சாப்பிடலாம். இரவில் ஆஞ்சநே யர் ஸ்தோத்திரம், ராமநாமம், ஆஞ்சநேயர் அஷ்டோத்திரங்கள், சுலோகங்கள் கூறி சேவிக்க வேண்டும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## எல்லவல நீர்வீழ்ச்சியில் நீராடத் தடை விதிப்பு

(கொழும்பு)

எல்லவல நீர்வீழ்ச்சிக்கு, மீள் அறிவித்தல் வரை சுற்றுலாப்பயணிகளுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எல்லவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்று உயிரிழப்போர் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதால் சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரணத்தைக் கருத்திற் கொண்டு குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், எல்லவல நீர்வீழ்ச்சியைப் பார்வையிட, சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி வழங்குவதாகவும் வெல்லவாய பிரதேச செயலாளர் தெரிவித்தார். (நி-5)

## தேசிய மிருகக்காட்சிச் சாலைகளின் புதிய பணிப்பாளராக ஷர்மிலா ராஜபக்ஷ

(கொழும்பு)

தேசிய மிருககாட்சிசாலைகள் திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளர் நாயகமாக ஷர்மிலா ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இன்று முதல் அவர் கடமைகளை பெறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பூஜித் மற்றும் ஹேமசிறிக்கு எதிரான வழக்கை ரத்துச் செய்ய உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை ரத்துச் செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.கொழும்பு நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 220 | 240 | 280 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 200 | 160 |
| தக்காளி | 180 | 190 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 160 | 140 | 150 | 200 |
| கரட் | 100 | 160 | 160 | 220 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 160 | 180 | 160 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 220 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 180-220 | 240 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 500 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 250 | 240 | 160 | 320 |
| லீக்ஸ் | 200 | 230 | 240 | 240 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 300 | 350 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 300 |
| போஞ்சி | 250 | 220 | 220 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-70 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 280 | -- | 300 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 80 | 30 | 20 |
| ஈரப்பலா | -- | - | -- | 120 |

# தொற்றா நோய்களின் தாக்கம் சிறுவர்களிடையே அதிகரிப்பு

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் பரவலை அடுத்து சிறுவர்களிடையே தொற்றா நோய்களின் தாக்கம் தற்போது அதிகரித்து வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

எனினும், பல பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகள் எவ்வாறு அமைய வேண்டும் என சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கைக்கு அமைய பாடசாலைகள் செயற்படவில்லையென மருத்துவர் குற்றம் சுமத்தினார். மேலும், மாணவர்களின் இணை பாடவிதான செயற்பாடுகள் மற்றும் உடற்பயிற்சி முறைமைகள் குறித்தும் கல்வி அமைச்சுடன் தங்களது கருத்துக்களைப் பரிமாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# பஞ்சத்தால் மக்களை கொல்ல வேண்டாம்

## எதிர்க்கட்சி அரசிடம் மன்றாட்டம்

(கொழும்பு)

விவசாய செய்கை தொடர்பாக ரஷ்யாவின் ஸ்டான்லின் மற்றும் சீனாவின் மாவோயிஸ்ட் போன்றவர்களின் கொள்கையினால் ஏற்பட்ட உணவு பஞ்சத்தில் மில்லியன் கணக்கான மக்கள் உணவின்றி மரணித்தனர்.

அந்த நிலைக்கு எமது நாட்டை கொண்டு செல்லாமல், துறைசார் நிபுணர்களின் அறிவுரைகளை பின்பற்றி செயற்பட அரசாங்கம் முன்வர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் காரி யாலயத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரி விக்கையில்,



விவசாயத்தில் ஏற்பட்டு வரும் பெரும் பிரச்சினைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படவுள்ள அவலநிலையை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தக் கொள்கையை விரைவில் மாற்றாவிட்டால் எமது நாடு பாரிய பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினை களை சந்திக்க வேண்டியிருக்கும். எனவே ஜனாதிபதி சேதன பசளை தொடர்பான தனது கடுமையான கொள்கையில் இருந்து விடுபடவேண்டும். 4 ஆண்டுகளுக்கு மேல் அறுவடைகள் இல்லாமல் போய்விட்டது. ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் துறைசார் நிபுணர்களின் அறிவுரைகளுக்கு செவிசாய்க்காமல், கட்டுக் கதைகள் மற்றும் பல்வேறு மோசடியான போலி ஆராய்ச்சிகள் மூலம் நிர்வகிக்க முற்பட்டால் அதன் விளைவு கள் ஆபத்தாக அமையும். எமது நாட்டில் இன்று நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்கள் நீக்கப்படுவதைக் காண்கிறோம். இது முற்றிலும் தவறு.

பேராதனை பல்கலைக் கழக விவசாயபீட பேராசிரியர் புத்தி மாரம்பேவையும் வெளியேற்றியிருக்கிறார்கள். அரசாங்கம் பின்பற்றுகின்ற விவசாய உரம்தொடர்பான கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் நாட்டு மக்களை உணவின்றி மரணிக்கச் செய்யும் நிலைக்கு அரசாங் கம் கொண்டு செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)


## "ஒரே நாடு - ஒரே சட்டம்"

# ஞானசாரதேரர் தலைமையில் செயலணி உருவாக்கம்

## -விசேட வர்த்தமானி வெளியாகியது-

(கொழும்பு)

"ஒரே நாடு, ஒரே சட்டம்" சட்ட வரைபை தயாரிப்பதற்காக ஞானசாரதேரர் தலைமை யிலான 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.



இதுதொடர்பான விசேட வர்த்தமானி அறிவி த்தல் வெளியிடப்பட்டுள்ளது.

13 பேர் கொண்ட இச் செயலணி ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# இன்று ஒரு தகவல்

## போரடிக்கிறதா?

உழைக்கத் தயங்குபவர்களும், உற்சாக மற்றவர்களுந்தான் போரடிக்கிறது என்னும் பதத்தைப் பயன்படுத்துகிறார்கள். உள்ளம் முழுவதும் இலட்சியங்களையும் உற்சாக எண்ணங்களையும் நிரப்பிக் கொள்ளுபவர்களுக்கு வாழ்க்கை வோரடிக்கவே செய்யாது.

போரடிக்கிறது என்று சொல்லுகிறவர்கள் ஏராளமான நேரத்தைச் சும்மா வீணடித்துக் கொண்டிருக்காமல் ஏதாவது பயனுள்ள காரியங்களில் ஈடுபடலாம்.

ஒவ்வொரு செயலும் போரடிக்கிறதென்றால் நம் மனம் உற்சாகமாக இல்லை என்று பொருள். நம் மனம் ஏன் உற்சாகமாக இல்லை என்று எண்ணிப் பார்த்து விடிவு காண வேண்டும். வேலையற்றவர்களுக்கு நாள் முழுவதும் போரடிக்கும். இவர்கள் டைப்ரைட்டிங், ஷார்ட்ஹேண்ட், வேறு பல புதிய கோர்சுகளைப் படித்துக்கொண்டும் அவ்வப்போது சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்து வேலைக்கான முயற்சி மேற்கொண்டும் இருந்தால் போராவது? நேரமே போதாது!

சிலருக்கு, அலுவலகம்–கல்லூரி முடிந்து வீட்டுக்கு வந்தால் என்னசெய்வது என்று தெரியாது. போரடிக்கிறது. என்பார்கள். படிக்கும் பழக்கம் போரடிக்கும் மனப்பான்மையை விரட்டி அடிக்கும்.

பொழுதுபோக்குச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்திக் கொள்வதும் மிகுந்த பலனைத் தரும். கடிதங்கள் எழுதுவது, நண்பர்களைப் பார்ப்பது, பழங் குப்பைகளைக் கிளறி ஒழுங்குபடுத்துவது, எதிர்காலத் திட்டங்களை வகுப்பது, நீண்ட நாள் செய்யாதிருக்கும் பணிகளைச் செய்து முடிப்பது, பிள்ளைகளுக்குப் பயிற்றுவிப்பது போன்றவையும் பயனளிக்கும் செயல்களாகும்.

விஷயதாகம், அறிவுத்தாகம்–இரண்டையும் ஏற்படுத்திக்கொண்டுவிட்டால் நேரம் போதாது. ஒவ்வொரு செயலிலும் ஏதோ ஒருவித சுவாரசியம் இருக்கத்தான் செய்கிறது. போரடிக்கிறது என்னும் சாயம் பூசிய கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்க்கிறவர்களால் இழையோடிக் கொண்டிருக்கும் சுவாரசியத்தைக் காணமுடியாது தான்!


மனக்கண்ணை அகலத்திறந்து பார்த்தால் அறிவுப்பூர்வமான சிந்தனைகள், ஏற்படும். நாம் சாதிக்கவேண்டிய சாதனைகள், அடைய வேண்டிய இலட்சியங்கள் ஆகியவற்றைத் திட்டமிட்டுக் கொண்டால்– போரடிப்பதாவது!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## புலிப்பல்லும் நரிக்கொம்பும்



“கரடியே உனக்கு தான் நன்றி.

உன்னுடைய மூலிகையால் குணமாகாத நோய், புலிப்பல் தாயத்தாலும் நரிக்கொம்பு தாயத்தாலும் குணமாகிவிட்டது. மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றது சிங்கம்.

“நீங்கள் என்னைத் தவறாக நினைக்கா விட்டால் ஒன்று சொல்லட்டுமா?”

“என்னிடம் தயக்கம் எதற்கு?” “தாயத்தில் இருந்தது புலிப்பல்லும் இல்லை, நரிக்கொம்பும் இல்லை சிங்கராஜா. வெறும் கற்கள். மனிதர்கள் தாம் மூட நம்பிக்கையில் நமக்குத் தீங்கு இழைக்கிறார்கள் என்றால், நாமும் அதே செயல்களைச் செய்யலாமா? இனி இப்படி யாராவது சொன்னால் நம்பி விடாதீர்கள். நீங்கள் புத்திசாலி என்பதால்தான் உங்களை ராஜாவாக வைத்திருக்கிறோம். எங்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது தான் உங்கள் பொறுப்பு” என்றது கரடி.

“மூடநம்பிக்கையில் இருந்த என்னை மீட்டு எடுத்து விட்டாய். இனிமேல் இப்படி ஒரு செயலைச் செய்ய மாட்டேன்.

புலியையும் நரியையும் வரச் சொல். நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்” என்றது சிங்கம்.

(முற்றும்)

# மகாபாரதம்

227



### பாவத்திற்குக் காரணம்

பாவத்திற்குக் காரணம் யாது என்ற தருமரின் வினாவிற்கு பீஷ்மர் அளித்த பதில், “தருமா! பெரிய முதலை போன்றது பேராசை. அதுவே பாவத்திற்கு இருப்பிடமாகும்.

பேராசையிலிருந்து பாவமும், துன்பமும் உண்டாகின்றன. மேலும் பேராசை இம்சைக்குக் காரணமாகிறது. பேராசையால் சினம் உண்டாகிறது.

மடைமை, சூழ்ச்சி, மானக்கேடு, பொறாமை, பொருள் நட்டம், பழி ஆகிய அனைத்திற்கும் பேராசையே காரணமாகும். மக்கள் தம் தீய செயல்களை விடாமல் இருப்பதற்கும் காரணம் பேராசைதான்.

எவ்வளவுதான் இன்ப போகங்களை ஒருவன் அனுபவித்தாலும் அவனது ஆசைக்கு அளவே கிடையாது. பல நதிகள் வந்து விழுந்தாலும் கடல் நிரம்பாதது போல பேராசை உள்ளவனிடம் எவ்வளவு செல்வம் இருந்தாலும் மன நிறைவு ஏற்படாது. தேவர்களும், அசுரர்களும் கூடப் பேராசையின் உண்மைத் தன்மையை உணரவில்லை.

அறியாமையையும், ஐம்பொறிகளையும், மனத்தையும் வென்ற மனிதன் பேராசையை வெற்றி கொள்ள வேண்டும்.

மனதை அடக்காத பேராசைக்காரரிடம் வீண் ஆடம்பரம், துரோகம், புறங்கூறல், பொறாமை ஆகியவை இருக்கும். மிகப் படித்த அறிஞர்கள் ஆகமக் கருத்துக்களை நன்கு மனதில் வைத்திருப்பர். பல ஐயங்களை விலக்குவர்.

ஆனால்பேராசைகாரணமாக அவர்கள் அறிவு இழந்து எப்போதும் துன்புறுவர். அவர்கள் உள்ளம்கொடூரமானது. ஆனால் தேனொழுகப் பேசுவர். தருமத்தின் பெயரால் அவர்கள் உலகைக் கொள்ளையடிப்பர்.

மன்னனே! நேர்மையானவர்களைப் பற்றிக் கூறுகிறேன். அவர்கள் மேல் உலகம் இல்லையென்றாலும் ஈதலே கடன் என்று எண்ணுபவர். விருப்பு வெறுப்பு அற்றவர்.

பெரியோர்களின் சொற்களில் சிந்தை செலுத்தும் இயல்பினர். புலனடக்கம் உடையவர். வாய்மையைப் போற்றுபவர். இன்பத்தில் திளைக்க மாட்டார்கள். துன்பத்தில் மூழ்கமாட்டார்கள். இரண்டையும் சமமாகக் கருதுவர்.

அவர்கள் செய்யும் தருமம் பிறர் பாராட்டுதலுக்கோ புகழுக்கோ அல்ல. பயம், சினம், ஆசை ஆகியவை இவர்களிடம் நெருங்கா. இத்தகையோரை நீ போற்றுதல் வேண்டும். (தொடரும்)

நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோரிக்கையற்றுக் கிடக்கிறதே வேரில் பழுத்த பலா

கோரிக்கையற்றுக் கிடக்கிறதே வேரில் பழுத்த பலா என்று பாவேந்தர் பாரதிதாசன் குரல் கொடுத்தார்.

சீதனக் கொடுமையின் காரணமாக திருமணம் செய்ய முடியாமல் இருந்த அருமந்த பெண்களின் நிலைமையைச் சித்தரிப்பதற்காக அந்தக் கவிஞனின் சிந்தையில் எழுந்ததுதான் மேற்போந்த கருத்தியல்.

குடும்பத்துக்குரிய அத்தனை இயல்புகளையும் கொண்டிருந்த பெண்கள் சீதனம் இல்லை என்பதால் கோரிக்கையற்று இருந்ததை வேரில் பழுத்த பலாவுடன் ஒப்பிடுகை செய்ததை நினைத்துப் பார்க்கையில், ஒரு கவிஞனின் சமூகப் பார்வைக்குள் ஒரு பெரும் அவலம் மிக நுட்பமாக உணர்த்தப்படுவதைக் காண முடியும் என்றளவில் இஃது ஒருபுறமிருக்க,

இப்போதெல்லாம் விவசாயிகள் இரசாயன உரம் இன்மையால் மிகத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

இதுகாறும் அசேதனப் பசளைக்குப் பழக்கப்பட்ட நம் விவசாயிகள், உரத்தை நம்பியே ஏக்கர் கணக்கில் நெற் செய்கையும் இதர பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட்டனர்.

எனினும் அசேதனப் பசளை அதிரடியாக நிறுத்தப்பட்டதால் அடுத்த கட்டம் என்ன செய்வது என்று தெரியாமல் விவசாயிகள் கதிகலங்கி நிற்கின்றனர்.

இதன் எதிரொலியாக ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் அவர்கள் நடத்தி வருகின்றனர்.

எனினும் அதற்கான தீர்வு எதுவுமில்லை என்பதாகவே நிலைமையுள்ளது.

பொதுவில் உரவகைகளின் அதீத பயன்பாடும் கிருமிநாசினிகளின் மிதமிஞ்சிய பாவனையும் புற்றுநோய் மற்றும் சிறுநீரகக் கோளாறு உள்ளிட்ட பல்வேறு வியாதிகள் ஏற்பட்டு மக்களின் அருமந்த உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் உரப் பாவனையையும் கிருமிநாசினிகளின் அதீத பயன்பாட்டையும் முற்றாக நிறுத்துவதென அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை வரவேற்கின்றவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

அதேநேரம் ஒட்டுமொத்த உரப் பயன்பாட்டையும் அடியோடு நிறுத்திவிட்டால், எங்ஙனம் வேளாண்மை செய்ய முடியும் என்ற விவசாயிகளின் கேள்வி வானைப் பிளக்கிறது.

எனவே உரப் பயன்பாட்டை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் அனுமதித்திருந்தால், இந்தளவு தூரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற கருத்துக்களும் இருக்கவே செய்கின்றன.

எது எவ்வாறாயினும் அருமந்த இயற்கைப் பசளைகள் தெருவிலும் வெட்டவெளிகளிலும் கொட்டிக் கிடக்கின்றன.

ஆம், எங்கும் இலைக் குப்பைகள், கால்நடைகளின் எருக்கள் என இயற்கைப் பசளைகள் வேரில் பழுத்த பலா போல தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

ஆகவே இனிமேலாவது, எம் விவசாயிகள் இயற்கைப் பசளைகளை உரமாகப் பயன்படுத்துவது எனத் திடசங்கற்பம் பூண வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# கற்றல் நடவடிக்கை ஆரம்பித்த பல பாடசாலைகளில் கொரோனா பரவல்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பித்த பல பாடசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று உருவாகியுள்ளது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

ஆரம்பப் பாடசாலை மாணவர்களில் பலருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது எனச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்னும் 6 முதல் 13 வரையிலான வகுப்புகளுக்குக் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான பரிந்துரைகள் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் சில பாடசாலைகளில் அதிபர்கள் மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அழைக்கவுள்ளனர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது எனவும் இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை அதிபர்கள், ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

# அரசின் தவறான தீர்மானங்களால் விவசாயத்துறை முழுமையாக அழிவடையும்

## பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சளவில் அனைத்தையும் சாதித்து விடலாம் என்ற நிலையில் இருந்து கொண்டு அரசாங்கம் தீர்மானங்களை விரைவாக செயற்படுத்துகிறது. அதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை. நல்லாட்சி அரசாங்கம் செயற்படுத்திய 100 நாள் செயற்கிட்டக்கை முடிந்தால் செயற்படுத்துமாறு அரச தலைவர்களிடம் சவால் விடுகிறேன். அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களினால் இவ்வருடத்துடன் விவசாயத்துறை முழுமையாக அழிவடையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற "43ஆவது படையணி" கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விவசாயத்துறை தொடர்பில் ஜனாதிபதி முன்னெடுத்த தவறான தீர்மானம் முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

நனோ-நைட்ரஜன் திரவ உரப் பயன்பாட்டினால் சிறந்த விளைச்சலை பெற முடியாது. அரசாங்கத்தின் தவறான தீர்மானத்தினால் டொலர் நெருக்கடி உச்சம் பெற்றுள்ளது.

இதன் காரணமாக இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டு அதனை மறைப்பதற்காக சேதனப்பசளை என்ற நாடகத்தை அரசாங்கம் அரங்கேற்றுகிறது.

அனைத்து வகையான பயிர்ச்செய்கைகளுக்கும் 2 கோடி மெற்றிக்தொன் சேதன பசளை அவசியமாகும். தேசிய மட்டத்தில் சேதன பசளையை உற்பத்தி செய்வது இலகுவான காரியமல்ல. 2018 ஆம் ஆண்டு சேதனப்பசளை திட்டம் தோல்வியடைந்தது.

உரப் பிரச்சினை காரணமாக விவசாயிகள் தமக்கு தேவையான அளவிற்கு மாத்திரம் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகிறார்கள். இதனால் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மாத்திரம் உள்ளார்கள். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இணையாக எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதாக வலு சக்தி அமைச்சர் குறிப்பிட்டுக்கொள்கிறார்.

எதிர்வரும் மாதம் முதல் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக கோரப்பட்ட விலைமனுக் கோரலை சர்வதேச நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

மத்திய வங்கியும் இலங்கை வங்கியும் வெளியிடும் கடன் பத்திரத்தை சர்வதேச நிறுவனங்கள் அங்கீகரிக்காது. ஏனெனில் இலங்கையின் பொருளாதாரம் அந்தளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் நிலக்கரியை பெற்றுக்கொள்வதிலும் நெருக்கடி நிலை காணப்படுகிறது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 12 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பை எதிர்கொள்ள மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கருத்திற்கொண்டு உலக நாடுகள் இலங்கைக்கு கடனுதவி வழங்க முன்வருவதில்லை.

டொலர் பிரச்சினை காரணமாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரச குடும்பத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அவர்கள் சுகபோகமாக வாழ்கிறார்கள்.

2014 ஆம் ஆண்டு "ஆல பாலு ஆர்திகய" என்ற புத்தகத்தை வெளியிட்டேன். முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு பின்னால் மறைந்துள்ள கடன் சுமையின் தாக்கங்களை அப்புத்தகத்தில் குறிப்பிட்டேன்.


பயனற்ற அபிவிருத்திகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட அரச முறை கடன்களினால் நாடு இன்று வரை பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது என்றார். (ம)

## மருத்துவக்குறிப்பு

தண்ணீரில் உப்பைக் கரைத்து அதை ஒரு துணியில் நனைத்தெடுத்து கொதிநீர் பட்ட இடத்தில் ஒத்தி எடுக்க எரிச்சலும் குறையும். கொப்புளமும் வராது.

# சத்திய தரிசனம்

## பிரமாண்ட லிங்கம்



❖ ஆனாலும் உங்களில் சிலர் அதைச் சந்தேகிப்பீர்கள், மறுப்பீர்கள். அப்படிப்பட்டவர்களின் கர்மவினை அது. அவர்கள் என்ன செய்வார்கள்? (இங்கே பகவான் உரையை நிறுத்தினார். முதலில் வயிற்றுப் பகுதியிலும் பின்னர் நெஞ்சிலும் தொண்டையிலும் இயக்கம் தெரிந்தது. பகவான் மேசைப்பக்கம் சாய்ந்தார். தண்ணீர் குடித்தார். 20 நிமிடங்களில் முட்டை வடிவத்தில் இளஞ்சிவப்பு நிற லிங்கம் அவரது திருவாயிலிருந்து வெளிப்பட்டது. அதைத் தனது வலது கையின் கட்டைவிரல் மற்றும் சுட்டுவிரலுக்கு நடுவே பிடித்துக் கொண்டு சுவாமி தனது அருளுரையைத் தொடர்ந்தார்.

(தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

03

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அளவைகள் பொருள்களை அளப்பதற்கு மட்டும் பயன்படவில்லை. வாழ்க்கையையும் அளந்தறிவதற்கு உறுதுணையாக உள்ளன.

அளவைகள் வாழ்க்கைத் தத்துவங்களை எளிமையாக விளங்குவதற்காக முன்னோர்களால் பழமொழிகளில் எடுத்தாளப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**"சாண் ஏற முழம் சறுக்கும்", "தலைக்கு மேல வெள்ளம் போன பின்னால்சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன?", "தாய்ப்பவுண் ஆனாலும் தட்டான் மாப்பவுண் எடுப்பானாம்", "காலால் நடந்தால் காதவழி போகலாம், தலையால் நடந்தால் போக முடியுமா?" இப் பழமொழிகளில் சாண், முழம், மா, காதம் போன்ற அளவைகள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். அளவைகள் பொருள்களை அளப்பதற்கு மட்டும் பயன்படவில்லை. வாழ்க்கையையும் அளந்தறிவதற்கு உறுதுணையாக உள்ளன. அளவைகள் வாழ்க்கைத் தத்துவங்களை எளிமையாக விளங்குவதற்காக முன்னோர்களால் பழமொழிகளில் எடுத்தாளப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.**

### கம்பராமாயண யுத்த காண்டத்தில் அளவைகள்

கம்பராமாயணத்தின் ஆறாவது காண்டமாக அமைவது யுத்த காண்டமாகும். இக் காண்டம் கடல் காண் படலம் முதலாக விடை கொடுத்த படலம் இறுதியாக 39 படலங்களாக அமைக்கப்பட்டுள்ளது. இப் படலம் இராம இராவண யுத்தம், படைகளின் எண்ணிக்கை, இராமனின் வில்லாற்றல், இராவணன் வீழ்ச்சி, சீதை அக்கினிப்பிரவேசம், இராமன் பட்டாபிசேகம் என பல நிகழ்வுகள் கொண்டுள்ள தொகுப்பாகும். இப் படலங்களில் பல இடங்களில் அளவை முறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை பேராசிரியர் மா. விஜயலெட்சுமி பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழில் எழுதியிருந்தார். அவை இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

யுத்த காண்டத்தின் முதல் படலமாக அமைவது கடல்காண் படலமாகும். இப்படலத்தில் இராமன் தன் மனைவி சீதையை மீட்பதற்காக வானரப் படைகளுடன் கடற்கரைக்கு இராமனுடன் சென்ற வானரங்களின் எண்ணிக்கை எழுபது வெள்ளம் அளவாகும் இதனை

"பாழித் தெற்குள் ளனபொருப்பும் நிலனுந் தாழப் பரந்தெழுந்த
ஏழுபதின் பெருவெள்ள மகர வெள்ளத் திறுத்ததால்"

இப் பாடலில் வரும் வெள்ளம் என்பது தேர், குதிரை, யானை, காலான் என்ற நான்கு படைகளின் தொகுப்பாக அமையும் ஓர் அளவை முறையாகும். இங்கு வெள்ளம் என்பதை மிக அதிகமான எண்ணிக்கை என்பதை குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

குறிப்பு - எண்ணிக்கை அளவைக் குறிப்பிடுவது எண். அளவு காட்டாமல் மிகுதியைக் குறிப்பிடும் எண்ணுப்பெயர்களும் தமிழில் இருந்தன. அவற்றைத் தொல்காப்பியர் "அல்பெயர் எண்" என்று குறிப்பிடுகிறார். "ஐ"யில் முடியும் தாமரை, "அம்"மில் முடியும் வெள்ளம், "அல்"லில் முடியும் ஆம்பல் ஆகிய எண்ணுப்பெயர்கள் அளவிட முடியாத பேரெண்களைக் குறிப்பவை என்பது தொல்காப்பியம் தரும் விளக்கம்.

யுத்த காண்டத்தில் மூன்றாவது படலமாய் அமைவது இரணியன் வதைப்படலமாகும். சீதையைக் கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறை வைத்துள்ள இராவணனுக்கு அவன் தம்பியாகிய விபீடணன் சீதையை விடுவித்து இராமனிடமே அனுப்பி வைக்குமாறும் இராவணனுக்கு அறிவுரை நல்குகிறான்.

ஆனால் இராவணன் விபீடணனின் அறிவுரையை கேளாமல் தன்னை யாராலும் வெல்ல முடியாது என கர்வம் கொள்கிறான். அவன் கர்வத்தைப் போக்க எண்ணிய விபீடணன் தம் முன்னோர்களில் ஒருவனாகிய இரணியனின் வரலாற்றைக் கூறி அவன் அகம் பாவத்தால் திருமாலால் (நரசிம்ம அவதாரம்) அழிக்கப்பட்டதை எடுத்து இயம்புகிறான். இதுவே இரணியன் வதைப்படலமாகும். இரணியன் தன் மகனாகிய பிரகலாதனிடம் இறைவன் எங்குள்ளான் காட்டுவாயாக என்று கேட்ட பொழுது இறைவன்

"சாணிலு முளனோர் தண்மை யாணுவனேச்சே கூறிட்ட கோணினு முளன். ......"

இதில் கூறப்பட்ட அளவைகளின் பெயர் சாண், அணு, கோண் என்பவையாகும். 10கோண் = 1 நுண்ணணு. 10 நுண்ணணு = 1 அணு. இவ் அளவைகள் பற்றி பின்னர் பார்ப்போம்.

இரணியன் வதைப்படலம் மூலம் இறைவன் கண்களுக்கு தெரிகின்ற சாணாகவும், கண்ணுக்கு புலப்படாத 'அணு,கோண்' ஆகவும் உள்ளான் என்பது புலனாகின்றது. நம் முன்னோர்கள் பண்டைய காலத்திலேயே அறிவியல் வளர்ச்சி பெற்று, அணுவினை பிளக்க முடியும் என்பதனையும் அறிந்துள்ளனர். இதன் மூலம் கண்ணுக்குப் புலனாகாத பொருட்களையும் அவர்களால் அளக்க முடிந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

யுத்த காண்டத்தில் ஐந்தாவது படலமாக அமைவது இலங்கை கேள்விப் படலமாகும். இதில் விபீடணன் தன் அண்ணனாகிய இராவணனை விட்டுப்பிரிந்து இராமனிடம் வந்து சரணாகதி அடைகிறான். இராமனிடம் தன் நாட்டின் நகர அமைப்பு, படை எண்ணிக்கை பற்றி விளக்கிக் கூறுகிறான். இலங்கை மதிலின் அளவைக் கூறுமிடத்து

"ஏழுநூறியோசனை யகல மிட்ட கீழ்
ஆழதூறியோசனை யாழி மால் வரை"

இலங்கை நகரின் மதிலின் அகலம் ஏழுநூறு யோசனை. ஆழம் நூறு யோசனை என விபீடணன் இராமனிடம் கூறுகிறான். யோசனை என்பது மிக நீண்ட தூரத்தைக் குறிக்கப்பயன்படும் சொல் ஆகும். யோசனை என்பது அளவையாகும். அதாவது 4 முழம் = 1 பாகம், 6000 பாகம் = 1 காதம், 4 காதம் = 1 யோசனை ஆகும்.

இப் பாடலில் நான்கு காதம் தூர அளவே ஒரு யோசனையாக கூறப்பட்டுள்ளது. இவ் அளவை (யோசனை) தற்போது பயன்பாட்டில் இல்லை. காலமாற்றத்தால் யோசனையின் அளவும் மாறுபாடாக அமைந்திருக்கலாம். வால்மீகி இராமயணத்தில் யோசனை என்ற அளவு எட்டு மைல்களைக் கொண்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

**கம்பராமாயணத்தில் "பாழித் தெற்குள்ளன பொருப்பும் நிலனுந் தாழப் பரந்தெழுந்த - ஏழுபதின் பெருவெள்ள மகர வெள்ளத் திறுத்ததால்", "சாணிலு முளனோர் தண்மை யாணுவனேச்சே கூறிட்ட - கோணினு முளன். ......", "ஏழுநூறி யோசனை யகல மிட்டகீழ் -ஆழதூறி யோசனை யாழி மால்வரை" போன்ற பாடல் வரிகளில் வெள்ளம், சாண், அணு, கோண், யோசனை போன்ற தமிழர் அளவைச் சொற்கள் வருவதைக் காணலாம்.**

### படைப்பிரிவுகளின் கணக்கு

படைப்பிரிவுகள் பின்வருமாறு கணக்கிடப்படுகின்றன: ஒரு தேர், ஒரு யானை, மூன்று குதிரைகள், ஐந்து படைவீரர்கள் கொண்ட பிரிவு, ஒரு பட்டி எனப்படும்.

- 3 பட்டிகள் கொண்டது 1 சேனா முகம்
- 3 சேனாமுகங்கள் கொண்டது1 குல்மா
- 3 குல்மாக்கள் கொண்டது 1 கனம்
- 3 கனங்கள் கொண்டது 1 வாகினி
- 3 வாகினிகள் கொண்டது 1 பிரிதனா
- 3 பிரிதனாக்கள் கொண்டது 1 சம்மு
- 3 சம்முக்கள் கொண்டது 1 அனிகினி
- 10 அனிகினிக்கள் கொண்டது 1 அக்குரோணி

### அக்குரோணி

அக்குரோணி அல்லது அக்செளகிணி என்பது, பழங்காலத்து போர் அணி வகுப்பு வகைகளுள் ஒன்று. இது 21870 தேர்களையும், 21870 யானைகளையும், 65610 குதிரைகளையும், 109350 படைவீரர்களையும் உள்ளடக்கியது. இந்த எண்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இலக்கங்களைக் கூட்டும் போது 18 என்னும் எண் கிடைக்கும். (உதாரணம்: 21870ல், 2+1+8+7+0=18). அத்துடன், இதில்தேர், யானை, குதிரை, படைவீரர்1 : 1 : 3 : 5 என்னும் விகிதத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

மகாபாரதத்தில் இது குறித்துப் பல தகவல்கள் காணப்படுகின்றன. மகாபாரதத்தில், குரு சேத்திரப் போரின் போது பாண்டவர் தரப்பில் 7 அக்குரோணி படைகளும், கௌரவர்கள் தரப்பில் 11 அக்குரோணி படைகளுமாக 18 அக்குரோணி படைகள் பங்கெடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது.

(தொடரும்...)

## எதிர்வரும்...

மூன்று நாட்களுக்கு மழை வீழ்ச்சி அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அருகில் உள்ள தாழ்வான வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு காரணமாக குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருவாகியுள்ளதே இதற்கு காரணம் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் காலையிலும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யும் அபாயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை எச்சரித்துள்ளது. (ம)

## பெயருக்குக்கூட...

விசனம் தெரிவித்துள்ளார்.

அரசின் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறையாக்குவதற்காக ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.

குறித்த செயலணியில் 'பொதுமன்னிப்பு பெற்ற (பாவமன்னிப்பு) ஞானசார தேரரைத் தலைவராகவும் ஒன்பது சிங்கள நபர்களும் நான்கு முஸ்லிம்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தமிழரின் பெயரும் இல்லை என்று மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

"முஸ்லிம் பெயர்கள் இருக்கின்றன என்பதாலேயே முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கப்படப் போகின்றது என்பதல்ல.

உண்மையில் முஸ்லிம்களைத்தான் இங்கே குறி வைக்கிறார்கள். அதற்குக் கூடவே துணைக்கு சில முஸ்லிம்களை வைத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பதுவே பட்டவர்த்தனம்.

ஞானசாரரைத் தலைவராக போட்டால், உள்ளே என்ன நடக்கும் எனப் புதிதாக வகுப்பெடுக்க தேவையில்லையே. பையைத் திறக்காமலேயே பைக்குள் என்ன இருக்கின்றது என விளங்குகின்றது" என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் "பேஸ்புக்" பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பெயருக்குக்கூட ஒரு தமிழரை நியமிக்க மறுக்கும் இந்த மனிதரின் வெறுப்பு மனப்பான்மை வெறுப்பூட்டுவதாக உள்ளதென மனோ எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## சிங்கள பௌத்த...

நீதியரசர் விக்னேஸ்வரன் விசனம் வெளியிட்டுள்ளார்.

ஞானசார தேரர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணி தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கேள்வி - பதில் அறிக்கையில்,

**கேள்வி:** ஜனாதிபதி ஞானசார தேரரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு ஜனாதிபதி செயலணியை உருவாக்கியுள்ளார். அவருடைய நோக்கு ஒரு நாடு ஒரு சட்டம் என்பது இதுபற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

**பதில்:** ஜனாதிபதி பல்வேறு குற்றவாளிகளை இதுவரை தனது அதிகாரங்களைப் பாவித்து சிறைகளில் இருந்து வெளிக்கொண்டு வந்து மன்னிப்பு அளித்துள்ளார். உதாரணத்திற்கு இரண்டு நீதிமன்றங்களால் கொலைக் குற்றவாளியாக காணப்பட்ட இரத்நாயக்க என்ற இராணுவ வீரர் அவர்களுள் ஒருவர், கொலைக் குற்றவாளியாகக் காணப்பட்ட துமிந்த சில்வா மற்றொருவர். அண்மையில் கரணகொட என்ற முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டுக்களை கைவாங்கி அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

போர்க்காலத்தின்போது பல குற்றங்களைப் புரிந்த இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்ற பின் அவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு அரசாங்க உயர் பதவிக்ள் கொடுத்துள்ளார்.

ஆகவே குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறையில் இருந்த ஞானசார தேரரை தற்போது தமது ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக்கியமை எனக்கு வியப்பைத் தரவில்லை. அவருடைய அந்த செயலணியில் அங்கம் பெறும் அங்கத்தவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களும் ஒரு சில முஸ்லிம்களும் ஆவர்.

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்று கூறும் பொழுது இந்த நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடகிழக்கு மாகாணங்களை சிங்கள மாகாணங்களுடன் சேர்த்து அவை சிங்கள பௌத்தத்திற்குள் அடங்கியவை என்று எடுத்துக் காட்டவே இந்த இன ரீதியான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன்.

வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள்தான் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். 1833இல் வெள்ளையர்கள் இலங்கை முழுவதையும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கும் வரையில் வடகிழக்கு தமிழ் அரசர்களாலும் தமிழ் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன. தமிழ் மொழியே அவர்களின் மொழியாகவும் இருந்தது. கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் இன்னும் சில கண்டியத் தலைவர்களும் பிரித்தானியர்களுடன் 1815இல் செய்து கொண்ட உடன்படிக்கையில் தமிழிலேயே கையெழுத்து இட்டார்கள். இவ்வாறு தமிழுக்கும் தமிழருக்கும் என ஒரு அடையாளம் இலங்கையில் பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகையில் ஒரு நாடு ஒரு சட்டம் என்பதின் அர்த்தம் என்ன? இலங்கை ஒரு நாடு அல்ல. அது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், மலையக மக்கள் மேலும் பல சிறிய இன மக்கள் வாழும் நாடு. அதுவும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் வடகிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள். அரேபியாவில் இருந்தும் தென்னிந்தியாவில் இருந்தும் வந்து கிழக்கு மாகாணத்தில் குடியேறிய பின் தமிழ் மொழியையே அவர்கள் தம் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு இருக்கையில் இலங்கையானது ஒரு நாடாக இல்லாது பல நாடுகளைக் கொண்டிருக்கும்போது ஜனாதிபதி எவ்வாறு ஒரு நாடு பற்றி அறிவிக்கலாம்? மேலும் ஐந்து சட்டங்கள் நடைமுறையில் இருக்கும்போது இந்நாட்டில் எவ்வாறு ஒரு சட்டத்தை அமுல்படுத்த எண்ணலாம். அத்துடன் இவை யாவற்றையும் சிறையில் இருந்து வந்த ஒரு குற்றவாளியைத் தலைவராகக் கொண்ட ஒரு செயலணியைக் கொண்டு எவ்வாறு நடைமுறைப்படுத்த இருக்கின்றார்? தேரருக்கு எந்தளவுக்கு சரித்திரம் தெரியும், சட்டம் தெரியும்? ஜனாதிபதியின் போக்கு ஒன்றையே வலியுறுத்துகின்றது. இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்றும், அதன் அடிப்படையில் இந்த நாட்டை ஒரு நாடாக அடையாளப்படுத்த வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள். சிங்கள பௌத் தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தவேண்டும் என் பதே இந்த செயலணியின் குறிக்கோளாகும் என்றுள்ளது. (ம)

## அரசின்...

தாராளமாக வெளியேறலாம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பங்காளி கட்சியின் உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவின் மொட்டு சின்னத்தில் போட்டியிடாமல் தனித்து போட்டியிட்டிருந்தால் நிச்சயம் மக்களினால் புறக்கணிக்கப்பட்டிருப்பார்கள்.

அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கும் பங்காளி கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்திடம் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளோம் என்றார். (ம)

## பிரெஞ்ச்...

பிரான்ஸின் இலங்கைக்கான தூதருக்கும் இடையேயான சந்திப்பொன்று பிரெஞ்ச் தூதரின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இச்சந்திப்பின்போது ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர், புதிய அரசியலமைப்பு, தமிழர் பிரச்சினைகளுக்கான தீர்வு, ஐரோப்பிய ஒன்றியமும் பயங்கரவாத தடைச்சட்டமும் மற்றும் தற்போது நடைபெற்றுவருகின்ற சிங்கள குடியேற்றங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. (ம)

## நாடு முழுவதும்...

இடைத்தரகர்களால் மணல் அள்ளப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கம் என சுற்றுச்சூழல் அமைச்சு அறிவித்துள்ளது.

மணல் விநியோகத்தை முறைப்படுத்துவதற்காக மணல் விநியோக உரிமையாளர்கள் மற்றும் டிப்பர் வாகன சாரதிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இந்த தகவல் தெரியவந்துள்ளது. (ம)


**மெகா பவர்**
திகதி 27/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0916
வெற்றி இலக்கங்கள்: X 14 23 24 28 29

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 27/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1154
வெற்றி இலக்கங்கள்: விருச்சிகம் 3 0 1 8 8 5

**மஹஜன சம்பத**
திகதி 2021/10/27
சீட்டிழுப்பு இலக்கம் 4568
X 2 7 4 5 8 8

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2863
வெற்றி இலக்கங்கள்: Z 13 20 44 68

**தன நிதானய**
திகதி - 2021.10.27
சீட்டிழுப்பு இலக்கம் - 598
W 08 27 37 47

**வசனா**
சீட்டிழுப்பு வாரம் 096
சீட்டிழுப்பு திகதி 27.10.2021 புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 01 29 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 100,000.00/=

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு இல: 1371
சீட்டிழுப்பு திகதி: 27.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,258,528
வெற்றி இலக்கங்கள்: 24 40 42 47 B

**சனிதா**
சீட்டிழுப்பு இல: 3706
சீட்டிழுப்பு திகதி: 27.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,033,678.50
வெற்றி இலக்கங்கள்: 31 61 64 70 M

**ராசி**
சுப்பர் ஜக்பொட் 3,202,564.00/=
திகதி: 27.10.2021
வெற்றி வாரம்: 3257
வெற்றி இலக்கங்கள்: 24 31 51 61

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1545
சீட்டிழுப்பு திகதி 27.10.2021 தினம் புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 67,580,592.00/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: J 03 19 47 55

**ஜயோதா**
சீட்டிழுப்பு வாரம் 1780
சீட்டிழுப்பு திகதி 27.10.2021
வெற்றி இலக்கங்கள்: 04 20 35 59 J
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 27,368,988

# ஜனாதிபதி, இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

## ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்புகள் சித்திரவதைகள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைப்பு


(கோப்புப் படம்)

(கொழும்பு)

**ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்புகள், சித்திரவதைகள் போன்றவற்றைப் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் பல இராணுவ உயரதிகாரிகள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் International Criminal Court (ICC) வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. Global Rights Compliance LLP (GRC) என்ற சட்டவல்லுனர் அமைப்பு இந்த வழக்கைத் தாக்கல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பாதிக்கப்பட்ட 200 தமிழர்கள் சார்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற Global Rights Compliance LLP என்ற அமைப்பினால் ரோம் சட்டத்தின் 15ஆவது சரத்தின் (Article 7 of the Rome Statute) கீழ் இந்தச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய மற்றும் பலர் உட்பட பல சிரேஷ்ட இலங்கை அதிகாரிகள், "கடத்தல்கள், சட்ட விரோத காவலில் வைத்தல் மற்றும் சித்திரவதை போன்ற மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் என இந்த சமர்ப்பணம் குறிப்பிடுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொண்ட துன்புறுத்தலின் தீவிரம் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் தஞ்சம் அடைவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியிருக்கவில்லை" என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

### கம்பஹா மினுவாங்கொடையில்
## மரணவீட்டில் கலந்துகொண்ட 35 பேருக்கு கொரோனா

(கம்பஹா)

கம்பஹா, மினுவாங்கொடை ஹோரம்பெல்ல நவலோக பிரதேசத்தில் வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் மரண வீட்டில் கலந்துகொண்ட 35 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுப்படுத்தப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இதனைத் தெரிவித்துள்ளது. மரண வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வாரத்துக்குப் பின்பு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மரண வீட்டில் பங்கேற்றவர்களில் சிலருக்குத் தொண்டை நோவு, காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து மரண வீட்டில் பங்கேற்றவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 35 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மரண வீட்டுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்து பலர் வருகை தந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

எனவே, இந்த மரண வீட்டில் பங்கேற்றவர்களின் விபரங்களை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திரட்டி வருகின்றனர். (ம)


## கண்ணீர் காணிக்கை

பிறப்பு 1965.08.09

இறப்பு 2021.10.26



எமது நண்பன் **காந்தரூபன்** (காந்தன் - லண்டன்)
அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

**திருமதி யோகேஸ்வரி சிவலோகநாதன்**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்
காந்தரூபன் அவர்களின்
லண்டன் நண்பர்கள்

(8408)

**கல் அரியும் இயந்திரம் விற்பனைக்கு**

பாவனையிலுள்ள கொன்கிரீற் கல் அரியும் இயந்திரம், உரிய 300 இற்கும் மேற்பட்ட பலகைகளுடன் விற்பனைக்கு உள்ளது. (8402) **077 711 5876**

**இலவச அறிமுகக் கருத்தரங்கு**

ZOOM Classes - General Knowledge SLAS Open & Ltd. SLEAS Open. அனுபவம் வாய்ந்த வளவாளர் **வேதநாயகம் தபேந்திரன்** B.Com, PGD.PDS, MA. 28.10.2021 வியாழக் கிழமை இரவு 7 மணி முதல் 8.30 மணி வரையும்.
Meeting ID: 883 3701 7878, Pass code :Gkclass (C-2893)

**Whatsapp - 076 698 2219**

**பசுமாட்டை காணவில்லை**

சுப்பிரமணியம் சண்முகநாதன் என்பவருடைய பசுமாடு (சிவப்பு) (இனம் காணும் இலக்கம்: 41212153000l) கரணவாய் தெற்கில் (மட்டச்செடி) காணாமல் போய்விட்டது. இனங்கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**077 646 2615**
**076 474 9220** (C-2890)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதிக்கு அருகில் 1 பரப்பு காணி வீட்டுடன்
உடன் விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை.) (8401)

**077 404 3717**

**நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 04 நாட்களே**

**அமெரிக்க அதிஸ்ட விசா**



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

**காத்திருக்காமல் உடனே பதியுங்கள்**

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

**55000 இலவச விசாக்கள்**

**0768226244**

நாங்கள் இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் நிரந்தரமாக வாழ V2 Travels தான் காரணம். ஏனென்றால் V2 Travels போட்ட விளம்பரத்தினை பார்த்துத்தான் அமெரிக்க லொத்தர் விசாவிற்கு பதிவுசெய்தோம். எமக்கு அதிஸ்டம் கிடைத்ததை அறிவித்ததும் அவர்கள்தான். அமெரிக்கா செல்லும் வரை கூடவே துணையாக இருந்ததும் V2 Travels தான். (C-2833)



ஞானதீபன் குடும்பம் அமெரிக்கா விசா வெற்றியாளர்

**V2 Travels**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.